# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**19 வயதுப்பிரிவு**
(01.01.1999 – 31.12.2000 வரையில் பிறந்தோர்)

## தாய் மண்ணில் தொடரும் தமிழின அழிப்பு

ஓர் இனம் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால், அந்த இனம் தனது மொழி, பண்பாடு, நாகரிகம், பூர்வீக நிலப்பரப்பு போன்றவற்றைப் பேணிக்கொள்ளுதல் அவசியமாகின்றது. இவற்றைப் பாதுகாக்கும் தன்மையே அந்த இனத்தின் தொன்மையையும், வாழ்வாதாரத்தின் முதன்மையையும் அறிமுகம் செய்து வைக்கும் காரணியாகிறது.

தீர்க்கமான வழிநடத்தலுடன் இந்த வரலாற்றுப் பெரும் பணியைச் செவ்வனே ஆற்றி வந்த ஈழத்தமிழர்கள், இன்று தமது தாய்நிலத்தையும் உறவுகளையும் அரசியல் உரிமைகளையும் இழந்து நிற்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி, சிங்கள பேரினவாத அரசின் தமிழ் இன அழிப்பானது வெவ்வேறு வடிவங்களில் தமிழர் தாயகத்தில் தற்போதைய 'நல்லாட்சி' அரசாலும் தொடர்ந்து இடைவிடாது நடத்தப்படுகிறது.

போர்க்காலத்தில் தமிழர் தாயகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இனவழிப்பு சிங்கள இராணுவம் 'உயர்பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் தமது பிடிக்குள் பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்களை வன்கவர்வு செய்துள்ளது. தமிழீழ நிலப்பரப்பில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி அப் பிரதேசங்களில் இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டாய சிங்கள பாடக்கல்வி, தமிழர்களின் தொன்மையான வரலாற்று தடயங்களை அழித்தல், தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த விகாரைகளின் அமைப்பு, போதைவஸ்து பயன்பாடுகளினால் பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்தல், தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விச்சூழலை சீர்குலைத்தல், தமிழர்களின் தன்னிறைவுப் பொருளாதாரத்தை முடக்குதல் என தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பினை எங்கள் தாய் மண்ணில் திட்டமிட்டுத் தொடர்ந்து நடத்தி வருகிறது 'நல்லாட்சி' அரசு.

இலங்கையின் புதிய அரசியலமைப்பு உருவாக்கமும் இடம்பெற்று வருவதாகச் சொல்லப்பெறுகிறது. இனங்களுக்கு இடையேயான மோதல் தோற்றம் பெறக் காரணமாக இருந்த எந்தப் சிக்கல்களுக்கும் உரிய தீர்வு இதுவரை காணப்பெறவில்லை. மாறாக, பன்னெடுங்காலமாகத் தொடரும் தமிழின அழிப்புச் செயற்திட்டங்களை நயமான முறையில் நகர்த்திக்கொண்டு போகிறது. சிங்கள தேசம் நீதியை, நியாயமான அரசியல் தீர்வை ஒருபோதும் தமிழர் தேசத்திற்கு வழங்கப் போவதில்லை என்பதை மாறுபடாத அவர்களின் நோக்கமும் புதுவடிவமெடுத்துவரும் செயற்பாடுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. விண்ணப்பங்களை முன்வைப்பதும், வேண்டுகோள்களை விடுப்பதும் ஒருபோதும் மகாவம்சக் கனவுகளை ஊடறுத்துப் பேரினவாதத்தின் காதுகளில் போய்ச் சேரப்போவதில்லை என்பதே வரலாறு தரும் பாடமாகும்.

தமிழ் இனம் தனக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட கொடுமைகளை என்றும் மறந்து விடக்கூடாது. மறைக்கவும் அனுமதிக்கக் கூடாது. நமது அடையாளங்கள் அழிக்கப்படும் போதும், தமிழ் இனத்தின் உரிமை மறுக்கப்படும் போதும், அதிகார வர்க்கத்தால் ஒடுக்கப்படும் போதும், தனது இனத்தின் உரிமை, சமத்துவத்திற்காக ஒரே நோக்குடன் செல்லும் பாதையே போராட்டம். மக்கள் புரட்சி அரச பயங்கரவாதங்களுக்கும் முதலாளித்துவ சுரண்டல்களுக்கும் எதிராக வெடிக்க வேண்டும்.

தமிழர் தாயகத்தில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் தமிழின அடக்கு முறைகளுக்கு எதிராக நமக்கான போராட்டத்தை நாமே ஆரம்பிக்க வேண்டும், தொடரவேண்டும். நேர்த்தியான கொள்கை வகுப்புடனும், சிறந்த திட்டமிடல் முகாமைத்துவத்துடனும் முன்னெடுக்கப்பெறும் மக்கள் மயப்பட்ட போராட்டம், எமக்கான நேச சக்திகளையும், எமக்கு ஏற்ற அக, புற சூழல்களையும் உருவாக்கும்.

மாறாக, எமக்காக யாரும் போராடுவார்கள், யாராவது எமக்கு நீதியைத் தருவார்கள் என்ற எதிர்ப்பார்ப்பில் காத்திருக்க முடியாது. நாம் போராடாமல் விடுகின்ற ஒவ்வொரு தருணத்திலும், நாம் சோர்வடைகின்ற ஒவ்வொரு கணப்பொழுதுகளிலும், யாரையும் நம்பி நாம் காத்திருக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது போராட்டம் நீர்த்துப் போகும். அந்த ஆற்றலற்ற நிலையென்பது எமது போராட்டத்தின் அடித்தளத்தை மெதுமெதுவாக ஆட்டம் காணச் செய்து, இறுதியில் எமது நீதிக்கான போராட்டத்தை முற்று முழுதாக அழித்துவிடும்.

‘ஓர் இனத்தின் மொழி, வரலாறு, பண்பாடு போன்றவற்றை மறைவான முறையில் மழுங்கச் செய்வதும், திட்டமிட்டு சீர்குலைப்பதும் கூட இன அழிப்பின் வடிவமே..!’ என்பதை நாம் அனைவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். மாற்றங்களை ஏற்படுத்துபவர்களாக நாங்கள் மாறாத வரை, எங்களுக்கான மாற்றங்கள் உருவாகப்போவதில்லை. ஆகவே, மாற்றங்களுக்கான மாற்றங்கள் எங்கள் ஒவ்வொருவருடைய மனநிலையிலிருந்தும், செயற்பாட்டிலிருந்தும் ஊற்றெடுக்கட்டும். அந்த மாற்றங்கள் பெரும் எழுச்சியை உருவாக்கி ஈழத் தமிழர்களுக்கான விடுதலையைப் பெற்றுத் தரும். அதுவே மாவீரர் தியாகத்திற்கு வையகத் தமிழினம் வழங்கும் பெருமதிப்பாக அமையும்.

தமிழீழம் மீளும். தமிழினம் ஆளும்!

நன்றி,
வணக்கம்.